26th April 1960]

Reservation of seats for women in the State Transport buses.

*827-A *Q.*—SRIMATHI HEMALATHA DEVI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

. சென்னை நகரத்திலுள்ள அரசாங்க போக்குவரத்து பஸ்களில் பெண்களுக்கு என்று எத்தனை சீட்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN: Twenty per cent (20 per cent) of the seats are reserved for women passengers in the rear of the State Transport buses in the Madras City.

SRIMATHI HEMALATHA DEVI : ஜனத்தொகையில் பாதிக்கு மேல் உள்ள பெண்களுக்கு அதற்கான சீட்டுகள் போதாது ? பல பெண்கள் குழந்தைகளுடனும் வாங்கிய சாமான்களுடனும் பஸ்ஸில் ஏறி பிரயாணம் செய்யும்போது உட்கார இடமின்றி பிரயாணத்தை நின்றுகொண்டு சமாளித்து வருகிறார்கள். இந்த நிலைமையை மாற்றுவதற்கு சரி பாதியான சீட்டுகளை அவர்களுக்கு என்று ஒதுக்கமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ஜனத்தொகை அடிப்படையிலே இந்தச் "சீட்டு"களை ஒதுக்குவதில்லை. சாதாரணமாக பிரயாணம் செய்கிறவர்களைப் பொறுத்து இந்தச் "சீட்டு"-கள் ஒதுக்கப்படுகின்றன. இப்பொழுது 20 சத விகிதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம் நகரில் இருக்கும் பிரமுகர்கள் எல்லோரும் பஸ்களில் பெண்களுக்கு இடம் கொடுக்கும் பண்பு உள்ளவர்கள். அவ்வாறு இடம் கொடுக்கவில்லை என்று புகார் இதுவரையில் ஒன்று இரண்டுதான் வந்திருக்கிறதே தவிர, இப்பொழுது இருக்கிற நிலைமை சரியாகத்தான் இருக்கிறது.

SRIMATHI HEMALATHA DEVI : இப்பொழுது இருக்கும் நிலைமையை கனம் அமைச்சர் அவர்கள் சரியாக அறியாததற்குக் காரணம், அவர்கள் சொந்தக் காரிலேயே சென்று வருகிறார்கள். அவர்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்யவில்லை என்பதால்தான் பெண்கள் 20 சத விகிதம் தான் பஸ்ஸில் ஏறிச்செல்லுகிறார்கள் என்று நினைக்கிறார், அது சரியல்ல. பெண்கள் பஸ்ஸில் ஏறினால் ஆண்களில் ஒரு சிலர்தான் எழுந்து இடம் கொடுக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் கூறுவது போல பெண்கள் பிரயாணம் செய்யும்போது ஆண்கள் எழுந்து இடம் கொடுக்கும் காலம் வரும் வரையிலேனும் இம்மாதிரி சரிபாதி இடம் ஒதுக்கி கொடுக்க வேண்டும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 1957 எப்ரல் மாதம் வரை பஸ்ஸில்தான் போய்க்கொண்டிருந்தேன். அதற்குப் பிறகு பெண்கள் அதிகரித்து விட்டதாகச் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை. தொடர்ந்து நெருக்கடி ஏற்படுகிறது என்று சொல்வது பொறுத்தம் அல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

SRIMATHI HEMALATHA DEVI : குறிப்பாக மாணவர்கள் மாணவிகள் அதிகமாக போகிறார்கள் அதனால் நெருக்கடி ஏற்படுகிற காரணத்தால் பள்ளிக்கூட நேரத்தில் ஸ்பெஷல் பஸ்கள் விடுகிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பெண்களுக்கு 20 சத விகிதம் சீட்டுகள் கொடுத்திருப்பதனால் நெருக்கடி ஏற்படவில்லை. பள்ளி நேரங்களில் மாணவ-மாணவிகளுக்கு ஸ்பெஷல் பஸ் விடப்படுகின்றன.